**இலங்கை கலைக் கழகம் - 2021**

---

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கலைக் கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கழகம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் செயற்படுத்துதல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களித்தன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்ட சொத்துகளுக்கான கணக்களித் தன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் இணக்கஞ் செய்தல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையான திட்டமிட்டப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்வது அவசியமாகவுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 17 சந்தர்ப்பங்களில் கலைக் கழகத்தின் கூட்டங்கள் மற்றும் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,102,104 தொகைக்கான முற்பணங்களை தீர்த்தல்களை கணக்கீடு செய்வதற்காக நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் நாட்குறிப்புகள் பயன்படுத்தியிருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் அந்தக் குறைபாடுகள் தீர்க்கப்படும். | முறையாக திட்டமிடப்பட்ட உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை ஒன்று நிறுவனத்தினால் பேணிச் செல்ல வேண்டும். |

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரிவு 92(ஆ) இற்கு இணங்க, முழுமையாக பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட ஆனால் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,406,373 தொகை கிரயத்தை உடைய நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளியிடுவதற்கும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு இணங்க அந்தச் சொத்துக்களின் செயற்திறனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு வழுக்களை மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் | சொத்துக்களின் செயற்திறனுள்ள ஆயுட்காலத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதற்காக தற்போது குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. 2022 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது சொத்துக்களின் நினைவுப் பெறுமதி சமர்ப்பிப்பதற்கு இயலுமாகும். | நியமத்தின் விதி முறைகளின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 15 இன் 14 ஆம் பந்திக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் பாதீட்டுப் பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதி இடையே இணக்கக் கூற்றொன்று உட்படுத்தி அல்லது பாதீட்டுப் பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதி இடையே காணப்படும் பொருண்மையான வித்தியாசங்களுக்கான காரணங்களை விளக்கியிருக்கவில்லை. | 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது பாதீட்டு பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதி இடையே இணக்கக் கூற்றொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் விதி முறைகளின் படி செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 9,524,709 தொகைக்கான அரசாங்க மானியம் ஆண்டிற்கான வருமானம் என எடுக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இற்கு இணங்க அதற்குரிய கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்தி இருக்கவில்லை. மேலும் முன்னைய ஆண்டுகளில் ஏற்பாடுகள் பெறுவனவுகளின் மீதியும் உட்பட மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஏற்பாடுகள் பெறுவனவுகளின் மீதி என தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்ப கலைஞர் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு திருப்பிச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,211,706 தொகை நிர்வாகச் செலவுகள் என இனங்காணப்பட்டிருந்தது. | வருட இறுதி மேலதிக பணம் திரண்ட நிதியத்திற்கு செலுத்துதல் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2021 ஆண்டின் ஆரம்ப வங்கி கணக்கு மீதியில் ரூபா 1,710,066 இற்கான முன்னைய ஆண்டுகளின் மிகைப் பண கூட்டுத்தொகை ஒன்று காணப்பட்டது. அதன் காரணமாக 2021 ஆண்டின் இறுதி பண இருப்பு என காட்டப்பட்ட ரூபா 2,211,701 பெறுமதியில் 2021 ஆண்டில் ஏற்பாடுகள் பெறுவனவுகளின் மீதி மாத்திரமன்றி முன்னைய ஆண்டுகளின் மிகைப் பணமும் காணப்படுவதினால் ஆண்டிற்கான ஏற்பாடுகள் பெறுவனவுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் கணக்குப் பதிவின் போது ஏற்பட்டிருந்த தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச மானிய கணக்கீடு செய்தல் தொடர்பாக கணக்குக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டு அதன்படி அரச மானியம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. | | | |
| வெளியீடுகள் இருப்பு | 1,476,615 | 511 பிரதிகளைக் கொண்ட 2 வகையான பருவ வெளியீடுகளின் கிரயம் மற்றும் 2966 பிரதிகளைக் கொண்ட 1 வகையான வெளியீடுகளின் விற்பனை விலை சமர்ப்பிக்கப்படாமையால் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வெளியீடுகள் இருப்பின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | 2014 ஆண்டிற்கான கலைச் சஞ்சிகையில் அலகுக் கிரயம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். புத்தர் சிலைகள் வடிவமைப்புக் கலை ஆக்கங்கள் சமய சேவை ஒன்றாகும். விற்பனைக்காக செய்யப்பட்டது அல்ல. அவை பிரதான விகாரைகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றமையால் விற்பனை விலை ஒன்று குறிப்பிடப்படவில்லை. | தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1952 இன் 18 ஆம் இலக்க இலங்கை கலைக் கழகச் சட்டம் | | | |
| i. பிரிவு 7(அ), 7(ஆ) மற்றும் 11(1) | கழகத்தின் அங்கத்தவர்கள் மற்றும் நிறைவேற்று குழு அங்கத்தவர்களை முறைப் பிரகாரம் நியமனம் செய்து நியமனக் கடிதங்கள் வழங்கியிருக்கவில்லை. | புத்தசாசனம், பண்பாட்டு மற்றும் மதவிவகார அமைச்சரின் விதி முறைகளின் படி வரிசை அமைச்சினால் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நியமனங்கள் வழங்குவதற்காக இலங்கை கலைக் கழகத்தின் தலையீடு காணப்படவில்லை. | சட்டத்தின் விதி முறைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. பிரிவு 10(1) | ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை கழகத்தின் கூட்டம் ஒன்று நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆண்டிற்கான ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 2021 கொரோனா தொற்றுநோய் காரணமாக பொது மக்கள் கூடும் கூட்டங்கள் நடாத்தப்பட கூடாது என சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டிருந்தது. கலைக் கழகத்தின் | சட்டத்தின் விதி முறைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கூட்டங்களுக்காக அநேகமான எண்ணிக்கையானவர்கள் பங்குபற்றுவதனால் கூட்டம் நடாத்துவதற்கு முடியாமல் இருந்தது. இனிமேல் குறிப்பிட்டுள்ளவாறு கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | i. நிதிப் பிரமாணம் 135 | கழகத்தினால் 2021 ஆண்டிற்காக நிதி அதிகார கையழிப்பு சாட்டப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கலைக் கழகச் சட்டத்தின் மூலம் இலங்கை கலைக் கழகத்தின் நிறைவேற்றுக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி இது வரை செயற்பட்டிருக்கவில்லை. தற்போது இராஜாங்க அமைச்சில் இருந்து அறிவுரைகளைப் பெற்று நி.பி. 135 இற்கு இணங்க நிதி அதிகாரக் கையளிப்பு மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் படி நிதி அதிகாரக் கையளிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | ii. நிதிப் பிரமாணம் 445(1) | ஆளுக்குரிய சம்பளப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | ஆளுக்குரிய சம்பளம் தொடர்பாக அனைத்து விபரங்களும் அடங்கிய பதிவேடோன்று பேணப்பட்டு வருவதுடன் நிதிப் பிரமாணம் 445(1) இணங்கள ஆளுக்குரிய சம்பளப் பதிவேடொன்று பேணப்பட்டு வருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆளுக்குரிய சம்பளப் பதிவேடொன்று பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2003 ஜுன் 02 திகதிய PED/12 அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | i. பந்தி 5.2.5 | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 2021 ஆண்டிற்கான பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021 ஆண்டிற்கான பாதீடு அமைச்சு ஊடாக திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2022 ஆண்டு முதல் பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும். | பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | ii. பந்தி 4.2.6 | வரிசை அமைச்சு மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு காலாண்டு செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை | 2022 ஆண்டு முதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்டள்ளவாறு அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பொது 287 நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு தகவல்கள் உட்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2020 ஒக்தோபர் 26 திகதிய 02/2020 இலக்கங் கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பந்தி 2(vii) | கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றல்லாத கணக்கு எழுதுனர் பதவிக்காக 2012 திசெம்பர் 11 திகதி ஒப்பந்த அடிப்படையில் ஊழியர் ஒருவர் சேர்க்கப்பட்டு சேவைத் துண்டங்கள் இன்றி வருடாந்தம் நீடிக்கப்பட்டு காணப்பட்டது. 2021 ஆண்டிற்காக இந்த உத்தியோகத்தருக்கு ரூபா 370,000 இற்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் கணக்கு எழுதுனராக கடமையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்காக 2012 ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அனுபவம் உள்ள தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர் என்ற காரணத்தினால் இந்த உத்தியோகத்தரின் சேவையை ஒப்பந்த அடிப்படையில் 2012 ஆண்டு முதல் தொடர்ச்சியாக வருடாந்தம் நீடிப்பதற்கு காரணமாகியிருந்தது. | பதவியை அங்கீகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,176,242 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 737,820 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,438,422 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு நிர்வாக மற்றும் தாபன செலவுகள் ரூபா 3,791,240 இனால் அதிகரித்தல் முக்கியமான காரணமாகியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1952 இன் 18 ஆம் இலக்க இலங்கைக் கலைக் கழக சட்டம் காலத்திற்கு ஏற்றவாறு துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் தேவையை கவனத்தில் எடுத்து திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை கலைக்கழக சட்டத்தில் காணப்படும் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்காக சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருத்தம் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் உட்படுத்தி வரைபு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீண்டும் ஒரு முறை தற்போதைய செயலாளரிடம் விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தை திருத்துவதற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை சபைகளின் செயற்பாடுகள், பணிப் பொறுப்புகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்காமையால் கழகத்தின் ஆலோசனை சபை 11 கூட்டங்களுக்காக கழகத்தின் பிரதிநிதித்துவம் இன்மை, அதற்காக பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றி இருத்தல், ஆலோசனை சபைக் கூட்ட அறிக்கைகள் கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை, கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள், தீர்மானங்களை செயற்படுத்துவதின் முன்னேற்றம் கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை நடாத்தப்பட்ட போட்டிகளுக்காக கழகத்தின் அங்கீகாரம் பெற்றிருக்காமை போன்ற முறைசாரா சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் ஆலோசனை சபையில் இருக்க வேண்டிய குறைந்த மற்றும் கூடிய எண்ணிக்கையினர் சட்டத்தினால் விதிக்கப்பட்டிருக்காமையால் ஒரு ஆலோசனை சபையில் 10 இற்கும் 14 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான அங்கத்தவர்கள் காணப்பட்டதுடன், ஆலோசனை சபைக் கூட்டங்கள் நடாத்துவதற்கு | ஆலோசனை சபை செயற்பாடு தொடர்பாக இலங்கை கலைக் கழக நிறைவேற்றுக் குழுவிற்கு அறிவூட்டும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆலோசனைகளுக்கு முரணாக அந்த ஆலோசனை சபை பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்பட்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. துணை சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாக சிக்கல்கள் விடயத்திற்கு பொறுப்புள்ள அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக அவரினால் இலங்கை கலைக் கழகத்தின் மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இரண்டு அமைச்சுக்களின் கீழ் செயற்படுவதினால் இந்த நிறுவனங்களின் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக இலங்கை கலைக் கழகமும் புத்தசாசன பண்பாட்டு மற்றும் மதவிவகார அமைச்சின் கீழ் உரித்தாக்கப்பட வேண்டும் என அந்த அமைச்சிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆலோசனை சபை கலைக் கழகத்தின் அறிவுரைகளுக்கு முரணாக செயற்படுவதினால் காணப்படும் சிக்கல்கள் தொடர்பாக வரிசை அமைச்சு மற்றும் | தேவைப்பாடுகளை கவனத்தில் எடுத்து சட்டத்திற்கு திருத்தங்கள் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| உரிய விதி முறைகளும் சட்டத்தில் குறிப்பிடப்படாமையால் 2021 ஆண்டில் நடாத்தப்பட்ட ஆலோசனை சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 0 இற்கும் 7 இற்கும் இடையே காணப்பட்டது. | அமைச்சருக்கு அறிவுருத்தப்பட்ட போதிலும் அதற்கான பதில் கிடைத்திருக்கவில்லை. |